QM

12 – வகுப்பு

# காலாண்டுத்தேர்வு - 2024
# வணிகவியல்

மதிப்பெண்கள் : 90 நேரம்: 3.00 மணி

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20 * 1 = 20)

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை________ என்பர்.
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்
2. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்--------- அவர் அ) தனிநபர்
ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்
3. நாட்டில் ___ பங்குச் சந்தைகள் உள்ளன. அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25
4. மனித வளம் என்பது ஒரு ___________ சொத்து. அ) கண்ணுக்கு புலனாகும்
ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலையான ஈ)நடப்பு.
5. பணி மாற்றம் என்பது ஒரு ___ஆட்சேர்ப்பு வளமாகும். அ) அக வள ஆ) புற வள
(இ) புறத்திறனீட்டல் ஈ) மேலே குறிப்பிடப்பட்டஎதுவும் இல்லை.
6. சந்தையிடுகையில்சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது.
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்
7. கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
(a) கல்வி (b)கைபேசி (c) ஆடைகள் (d) வாகனங்கள்
8. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ)15.04.1990
9. _________ என்பவர் நவீன சந்தையியலின்மன்னர் ஆவார். அ) நுகர்வோர்
ஆ) மொத்த வியாபாரி இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி
10. பின்வருவனவற்றுள் மேலாண்மையின் முதன்மைபணி அல்ல ?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணிக்கமர்த்துதல்
11. பணச் சந்தையில்முக்கிய பங்காற்றும் அமைப்பு_______ அ) வணிக வங்கி
ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி
12. கூட்டு முதலீட்டுதிட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ____ எனப்படுகிறது. அ) பரஸ்பர நிதிகள் ஆ) பட்டியல்
இ) மறுபுறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஈ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள்
13. பணிவழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது? அ) வகுப்பறையில்
ஆ) தொழிற்சாலைக்கு வெளியே இ) வேலையில்லா நாட்களில் ஈ) விளையாட்டு மைதானத்தில்
14. இணையத்திற்குநுழைவு வாயில் என்பது
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்
5. பொருத்தமற்ற விண்ணப்பத்தாரரைநீக்குவதற்கான செயல்முறை என்று அழைக்கப்படுகிறது
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்
16. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியைநிர்ணயிப்பது ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது
ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது
17. நவீன சந்தையிடுகையுடன் தொடர்புடைய சரியான ஒன்றை தேர்ந்தெடுக்க.
அ) இடம் ஆ) பொருள் இ)செயல்திறன் ஈ) மேம்பாடு
18. பொருத்துக.

| | | | | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| 1) பணிவழி பயிற்சிமுறை | - i) பயிற்சியளிப்பு முறை | | அ) | I | ii | iii | iv |
| 2) பணிவழியற்ற பயிற்சிமுறை | - ii) விரிவுரை முறை | | ஆ) | ii | iii | iv | i |
| 3) திறன் தேர்வு | - iii) அடைவுச் சோதனை | | இ) | iv | iii | I | ii |
| 4) ஆளுமை ஆய்வுத் தேர்வு | - iv) உளவியல் ஆய்வுத் தேர்வு | | ஈ) | iii | I | ii | iv |

19. கூற்று (A): புறத்தோற்றமற்ற பத்திரங்கள் உருவாக்கம் என்பது நிறுவன பதிவாளரால் காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அழித்து புறத்தோற்றமில்லாத வகையில் பத்திரங்களாக மாற்றல் என்பதாகும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

காரணம் (R) : காகிதப் பரிவர்த்தனைகளை விட புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் விரைவான பரிவர்த்தனைகள் மற்றும் வர்த்தகத்தில் அதிக செயல்திறன் ஆகியவற்றை வழங்குகிறது

அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

20. பொருந்தாத ஒன்றை கண்டறிக அ) குடும்ப சந்தை
ஆ) தூய உலோகச் சந்தை இ) தேசிய சந்தை ஈ) உள்ளூர் சந்தை

II குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண். 30 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (7 * 2 = 14)

21. செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக.
22. வைப்புச் சான்றிதழ் சந்தை என்றால் என்ன?
23. துணைத் தரகர் என்றால் என்ன?
24. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
25. நேர்காணல் என்றால் என்ன?
26. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
27. பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன?
28. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக
29. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
30. போட்டியாளர்களால் அடையாளம் காணப்படாத ஒரு வரையறுக்கப்பட்ட பிரிவு மக்களை அடையாளம் கண்டு அந்த வாடிக்கையாளாரின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து சந்தையிடுதல் முயற்சிகளையும் செய்வதே ________ எனப்படும்

III குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
வினா எண். 40 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (7*3=21)

31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக. (ஏதேனும் மூன்று)
32. மூலதனச் சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.
33. மான் மற்றும் முடவாத்து – விளக்குக.
34. ஆட்சேர்ப்பின் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன?
35. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் மூன்று)
36. சந்தையில் என்னென்ன பொருள்களை சந்தையிட முடியும் என்பதை தெரிவிக்கவும். (ஏதேனும் மூன்று)
37. நுகர்வோரியல் குறித்து இயற்றப்பட்ட முக்கியச்சட்டங்கள் யாவை? (ஏதேனும் மூன்று)
38. ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவிர் அறிவது என்ன?
39. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் மூன்று)
40. _____ என்பது சில சூழ்நிலைகளில் வணிகர்கள் தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளை இருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர்.

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் (5*7=35)

41. மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
42. பங்கு பரிவர்த்தனைக்கும் பண்டமாற்று பரிவர்த்தனைக்கும் வேறுபாடுகளை தருக.
(ஏதேனும் ஐந்து) (அல்லது) செபியின் அதிகாரங்களை விவரி. (ஏதேனும் ஐந்து)
43. மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (ஏதேனும் ஐந்து)
44. பல்வேறு வகையான சோதனைகளை சுருக்கமாக விளக்குக (ஏதேனும் ஐந்து) (அல்லது)
சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி. (ஏதேனும் ஐந்து)
45. சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக. (அல்லது)
நுகர்வோரின் கடமைகளை விளக்குக? (ஏதேனும் ஐந்து)
46. பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
நவீன சந்தையிடுகையில் கையாளப்படும் ஏதேனும் இரண்டு முறைகளை விளக்குக.
47. பணிவழி பயிற்சிக்கும் பணியிடையற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் ஐந்து) (அல்லது) விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விவாதிக்க.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

**+2 வணிகவியல் காலாண்டுத் தேர்வு செப் - 24**
**சரியான விடை**

1. (இ) வேலைப்பகிர்வு
2. (ஈ) மேலே உள்ள அனைத்தும்
3. (ஆ) 24
4. (ஆ) கண்ணுக்கு புலனாகா
5. (அ) அக வளம்
6. (ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்
7. (அ) கல்வி
8. (இ) 15.04.1987
9. (அ) நுகர்வோர்
10. (அ) முடிவெடுத்தல்
11. (அ) வணிக வங்கி
12. (அ) பரஸ்பர நிதிகள்
13. (ஆ) தொழிற்சாலைக்கு வெளியே
14. (இ) மோடம்
15. (அ) தேர்வு
16. (ஈ)அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது
17. (இ) செயல்திறன்
18. (அ) i ii iii iv
19. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்
20. (ஆ) தூய உலோக சந்தை

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. செயலூக்கமளித்தல்:** ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பது மற்றும் பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பது ஆகும்.

**22. வைப்புச் சான்றிதழ் சந்தை:** வைப்புச் சான்றிதழ்களை வாங்கி விற்கும் இடம் வைப்புச் சான்றிதழ் சந்தை ஆகும். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் குறுகிய கால வைப்பு ஆகும்.

**23. துணைத் தரகர்:** என்பவர் பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராகச் செயல்படுபவர். தன்னை அமர்த்திய முதல்வருக்கு அதாவது உறுப்பினருக்கு வியாபாரத்தை பெற்றுத்தந்து அதற்காகக் கழிவு பெறுவார்.

**24. மனித வள மேலாண்மை:** என்பது ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல், மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியைச் செய்வதாகும்.

**25. நேர்காணல்:** ஸ்காட் என்பவர் கூற்றுப்படி நேர்காணல் என்பது தேர்ந்தெடுப்பவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுபவர் இருவரும் முகத்திற்கு முகம் பார்த்து அறிந்து உரையாடுவது ஆகும்.

**26. ஒழுங்குமுறை சந்தை:** அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படும் சந்தை அரசால் கட்டுப்படுத்தப்படும் சந்தை ஒழுங்குமுறை சந்தை ஆகும்.

**27.பசுமைச் சந்தையிடுதல்:** சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதை பசுமைச் சந்தைப்படுத்தல் எனப்படும்.

**28. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள்**
தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலப்பது.
மிளகுடன் பப்பாளி விதை சேர்ப்பது.

**29. ஜான். F.கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள்:** பாதுகாப்பில் உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கேட்கும் உரிமை

30. போட்டியாளர்களால் அடையாளம் காணப்படாத ஒரு வரையறுக்கப்பட்ட பிரிவு மக்களை அடையாளம் கண்டு அந்த வாடிக்கையாளாரின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து சந்தையிடுதல் முயற்சிகளையும் செய்வதே **தனியிடச் சந்தை** எனப்படும்

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகள்:**
சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்துதல்.
நோக்கத்தை மாற்ற அதிகாரத்துடன் இருப்பவர்களுடன் ஆலோசனை செய்கிறது,
நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

**32. மூலதனச் சந்தையின் ஏதேனும் இரு பணிகள்:**
**சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்:-** பொது மக்களிடமிருந்து சேமிப்பை திரட்டுகிறது. அதை மூலதனமாக மாற்றி தருகிறது.
**தொழில் துறை வளர்ச்சி:**பொது மக்களிடம் திரட்டப்பட்ட சேமிப்பை முதலீடாக மாற்றி தொழில் துறையில் முதலீடு செய்கிறது. இதனால் தொழில் துறை வளர்ச்சி பெறுகிறது.

**33. கலை மான்:-** கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் போது அதைப்பெற்று விற்கக் கூடியவர். இவர் முனைம வேட்டையாளர் என்று அழைக்கப்படுகிறார்.
**முடவாத்து:-** தம் நடவடிக்கையால் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கிற கரடி ஊக வணிகரே முடவாத்து எனப்படுகிறார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**34. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்பாடாத விண்ணப்பங்கள்:** நிறுவனங்கள் காலிப்பணியிடங்கள் குறித்த எவ்வித அறிவிப்பும் செய்யாத நிலையில் வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலைவேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்களை கோரப்படாத விண்ணப்பங்கள் ஆகும்.

**35. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?** நவீன சந்தையிடுகை கொள்கையானது அறிவுத் திறத்தை பயன்படுத்த உதவுகிறது. சந்தையிடுகை துறையில் மேம்பாட்டை ஏற்படுத்துகிறது, சந்தையிடுகை தொடர்புள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழிவகை செய்கிறது.

**36. சந்தையில் என்னென்ன பொருட்கள் சந்தையிட முடியும்:** பண்டங்கள், பணிகள், நபர்கள், இடம், அமைப்பு, தகவல்

**37. நுகர்வோரியல் குறித்து இயற்றப்பட்ட முக்கியச் சட்டங்கள் யாவை? (ஏதேனும் 3)**
அத்தியாவசியப் பொருட்கள் சட்டம்:- 1955
உணவுப் பாதுகாப்பு தரச்சட்டம்:- 2006
உணவுப் பொருட்கள் கலப்படத் தடைச்சட்டம்:- 1954

**38. ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவிர் அறிவது யாது?**
தற்போதைய சட்டங்கள் பாதுகாப்பில்லாத பொருட்களை தயாரிப்பதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது என்ற கடமை விற்பனையாளர்களுக்கும் மற்றும் உற்பத்தி செய்பவர்களுக்கும் உள்ளது.

| 39. அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|
| அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர்மட்ட அளவில் |
| பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |
| முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |
| தொடர்பு தன்மை | கொள்கையை செயல்படுத்தல் | கொள்கைகளை உருவாக்குதல் |

**40. செயற்கைப் பற்றாக்குறை** என்பது சில சூழ்நிலைகளில் வணிகர்கள் தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளை இருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர் பலகையை வைக்கின்றனர்

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) மேலாண்மையின் பல்வேறு பணிகள்:**
**திட்டமிடல்:-** முன் கூட்டியே முடிவெடுத்தல்.
வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.
**ஒழுங்கமைத்தல்:-** உறுப்பினர்களிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துதல்.
பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல் மற்றும் பொறுப்பு ஏற்றல்.
**பணி அமர்த்துதல்:-** பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்.
குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல்.
பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீட்டு ஊக்கம் அளித்தல். (பணப்பலன், பதவி உயர்வு)
**இயக்குவித்தல்** இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல்
கூட்டம், கையேடுகளை, சுற்றறிக்கை போன்றவை மூலம் தகவல்களை அளித்தல்.
**ஒருங்கிணைத்தல்:-** பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல்.
அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

**41.ஆ) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகள்:**
சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் செய்தல்.
நிலை மூலதனம் திரட்டுதல்.
தொழிற்துறை வளர்ச்சியடைதல்.
உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தையிடல்.
செயல்திறனுக்கு நம்பகமான வழிகாட்டுதல்.

| 42 அ) சிறப்பியல் புகள் | பங்கு பரிவர்த்தனை (பங்குச் சந்தை) | பண்டமாற்று பரிவர்த்தனை (பொருட்கள் பரிமாற்றம்) |
|---|---|---|
| பொருள் | பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்றல் | பண்டங்கள் வர்த்தகம் செய்யப்படும். |
| பணிகள் | சந்தைப்படுத்துதலை எளிதாக்குகிறது | நீர்மைத் தன்மையை ஏற்படுத்துதல். |
| நோக்கம் | மூலதன உருவாக்கம் | மூலப்பொருள் விற்பனையை அதிகரித்தல். |
| பங்கேற் பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள், வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள். |
| ஒப்பந்தங்களின் காலம் | பதினைந்து நாட்கள் | 2 அல்லது 3 மாதங்கள். |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**42.ஆ) செபியின் அதிகாரங்களை விவரி**

**பங்குச் சந்தைகள் மற்றும் இடைத்தரகர்கள்:-** வணிக பரிவர்த்தனைகளில் பங்குச் சந்தைகள் மற்றும் இடைத் தரகர் இடமிருந்து தகவல்களை கேட்கலாம்.

**நாணய அபராதங்கள்:-** இடைத்தரகர்களின் வரம்பு மீறலுக்கு நாணய அபராதங்களை விதிக்கலாம்.

**உள்வழி வர்த்தகம்:-** உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துதல்.

**பத்திரங்கள் ஒப்பந்தசட்டம்:-** பங்குசந்தையில் ஆளும்குழுவில் மூன்றுஉறுப்பினர்களை நியமிக்க முடியும்.

**பங்குச் சந்தை வணிகத்தை ஒழுங்குபடுத்துதல்:-** பங்குச் சந்தையில் உள்ள இடைநிலையர்கள் முறையற்ற வியாபார செயல்பாடுகள் போன்றவற்றை ஒழுங்குப்படுத்துகிறது.

**43.அ) மனிதவள மேலாண்மையின் முக்கியத்துவம்:**

**மனித சக்தி தேவைகளை அடையாளம் காணுதல்:-** ஒரு நிறுவனத்தின் செலவுகளை மேம்படுத்த தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கையை அடையாளம் காண

**மாற்றங்களை இணைத்துக் கொள்ளல்:-** மாற்றம் என்பது எந்த அமைப்பிலும் நிலையானது மற்றும் இந்தமாற்றத்தை நிறுவனத்தில்அறிமுகப்படுத்த மனிதவளமேலாண்மை ஒருமுகவராக செயல்பட வேண்டும்.

**மனித சக்தியின் சரியான தேவையை உறுதி செய்தல்:-** மனித வள மேலாண்மையின் மூலமாக நிறுவனத்தில் எந்த நேரத்திலும் பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது உபரி ஏற்படாதவாறு பாத்துக் கொள்ள வேண்டும்.

**சரியான வேலைக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்தல்:-** சரியான வேலைக்கு சரியான தகுதியுடைய நபர்களை மனித வள மேலாண்மை உறுதி செய்கிறது. இதனால் குறைந்த தகுதி, மிகைத் தகுதி நீக்கப்படுகிறது.

**திறன் மற்றும் அறிவை மேம்படுத்துதல்:-** பயிற்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் இன்று வரை இருக்கும் தொழில் சார்ந்த அறிவை பணியாளர்களுக்கு வழங்குகிறது.

**43.ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?**

**அதிகவிலைக்கு விற்றல்:-**பொருளின் விலையைவிட கூடுதலானவிலையில் விற்று நுகர்வோரை ஏமாற்றுகின்றனர்.

**கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**போலியான பொருட்கள்:-** மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள பொருட்களை போலியாக செய்து விற்று நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர்.

**செயற்கை பற்றாக்குறை:-** வியாபாரிகள் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு இருப்பு இல்லை என செயற்கைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

**தரக்குறைவு:-** கட்டுமானம் செய்து விற்கப்படும் பொருட்களைத் திறந்து பார்த்தால் பல சமயங்களில் தரம் குறைந்த பொருட்களே இருக்கும்.

**44.அ) பல்வேறு வகையான சோதனைகள் சுருக்கமாக விளக்குக.**

**மனோபாவச் சோதனை:-** விண்ணப்பதாரரின் மனநிலையை அளவிடும் சோதனை ஆகும்.

**அடைவுச் சோதனை:-** விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனையாகும். கல்வி நிறுவனங்கள் வழக்கமாக நடத்தப்படும் தேர்வுகள்.

**நுண்ணறிவுச்சோதனை:-** இதுமூளையின்சிந்திக்கும்ஆற்றல்,மனத்திறன்,நுண்ணறிவுபோன்றவற்றை சோதித்தல்.

**முடிவெடுக்கும் திறன் சோதனை:-** இச்சோதனை விண்ணப்பதாரர்களின் சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறனை சோதிக்க பயன்படுகிறது.

**ஆர்வச் சோதனை:-** தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆர்வம் எத்துறையில் மிகுதியாக உள்ளதோ அத்துறையில் பணியை ஒதுக்குதல்.

**44.ஆ) சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது விவரி?**

**குடும்பச் சந்தை:-** குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பொருட்களை பரிமாற்றம் செய்வது.

**உள்ளூர் சந்தை:-** ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக வாங்குவோரும் விற்போரும் உள்ளூரிலேயே பங்கேற்பது,

**நீண்ட கால சந்தை:-** நீடித்து உழைக்க கூடிய பொருட்களை கையாளும் சந்தையாகும்.

**மிகக்குறுகியசந்தை:-** மிகக்குறுகியகாலத்தில் பயன்படுத்தக் கூடிய பொருட்கள் மட்டும் கையாளும் சந்தை.

**மொத்த விற்பனை சந்தை:-** உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வது.

**45.அ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.**

**பொருள்:-** பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு. பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.

**விலை:-** பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பு விலையாகும்.

**இடம்:-** சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம் முக்கியமாகும்.

**விற்பனை மேம்பாடு:-** விற்பனை மேம்பாடு நடவடிக்கையில் விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**45.ஆ) நுகர்வோரின் கடமைகள் யாவை?**

**தரமான பொருட்களை வாங்குதல்:-** பொருட்களை வாங்குவதற்கு முன்பு அதனைப் பற்றி முழுமையான விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

**பொருட்களின் எடை அளவு உறுதி செய்தல்:-** பொருட்களின் அளவு, எடை இவற்றை வாங்கும்முன் உறுதி செய்ய வேண்டும்.

**விவர அட்டைகளை படித்தல் :-** பொருட்களின் விவர அட்டைகளை முழுமையாக படிக்க வேண்டும்.

**தவறான விளம்பரம் மீது எச்சரிக்கையாக இருத்தல் :-** விற்பனையாளர்கள் அளிக்கும் தவறான விளம்பரங்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**ரொக்க இரசீதை உறுதி செய்தல்:-** பொருட்களுக்கான இடாப்புடன் ரொக்க இரசீது, உத்திரவாத அட்டை போன்றவற்றை பெறுவது நுகர்வோரின் கடமையாகும்.

| 46.அ) தன்மைகள் | பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்சமதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

**46.ஆ) நவீன சந்தையிடுகையில் ஏதேனும் 2 விளக்குக.**

**கொரில்லா சந்தையிடுதல்** வரவு, செலவு திட்டத்தில் சந்தையிடுவதற்க்காக, அதிகளவு நிதியை ஒதுக்குவதை விட நேரம், ஆற்றல் மற்றும் கற்பனையின் மூலம் வழக்கத்திற்கு மாறான முறையை கையாண்டு வாடிக்கையாளரின் கவனத்தை ஈர்த்து பொருள் அல்லது சேவைப் பற்றிய தகவல்களை அளித்து விற்பனையை பெருக்கும் முறையை கொரில்லா சந்தையிடுதல் என்கிறோம். இது விற்பனையை அதிகரிக்கும்.

**சமூக சந்தையிடுதல்** சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில் சமூகத்தின் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில் பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை சமூக சந்தைப்படுத்தல் என்கிறோம்.

| 47 அ) அடிப்படை | பணிவழி பயிற்சி | பணிவழியற்ற பயிற்சி |
|---|---|---|
| **விளக்கம்** | வேலை சூழலில் வேலையைப் புரிந்து கொள்கிறார் | பணிச் சூழலுக்கு வெளியே பயிற்சியைப் பெறுகிறார். |
| **செலவு** | செலவு குறைவு | செலவு அதிகம் |
| **இடம்** | வேலை இடத்திலேயே பயிற்சி | வேலை இடத்திற்கு வெளியே பயிற்சி |
| **கோட்பாடு** | நிறைவேற்றல் மூலம் கற்றல் | அறிவை பெறுவதன் மூலம் கற்றல் |
| **கற்றல்** | அறிவை பெறுவதன் மூலம் கற்றல் | அனுபவத்தின் மூலம் கற்றல் |

**47.ஆ) விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விவாதிக்க?**

மேலாளர்கள் மட்டுமே மிக முக்கியமான முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளனர்.

பிரச்சினைகளை மேலாளர்களுக்கு தெரிவிக்க கால நேரம் எடுத்துக் கொள்கிறது.

கீழ்நிலை பணியாளர்களின் உற்சாகம் குறைகிறது.

இயல்பு நிலையிலிருந்து விலகும் பணியாளரை நிர்வகிப்பது கடினம்.

தோல்விக்கு காரணமானவர்களை நீக்க வழிகோலுகிறது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com